1971 ஜூன் 23]

திரு. சு. துரைசாமி : அந்த வேலை எப்போது முடியும்? நீராற்றில் அணை கட்டுவதன் மூலம் எவ்வளவு நீரை தேக்கி வைக்க முடியும், எவ்வளவு ஏக்கர்களுக்குக் கொடுக்க முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 9,000 மில்லியன் கன அடி தேக்க முடியும். வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவாக நிறைவேற்றி வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மு. பழனிசாமி : நீராறு ஆற்றில் அணை கட்டுவது சம்பந்தமாக நமது அரசு பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருப்பதைப் போல் யானைமலை ஆற்றுத் தண்ணீரைப் பெற்றுத் தர தீவிர முயற்சி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேரள அரசு இடமலையாற்று நீர்த்தேக்கத்தைக் கட்டிய பிறகு பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் பயன்படுத்துவதற்காக ஆனைமலையாற்றிலிருந்து 2,500 மில்லியன் கன அடி நீரைத் திருப்புவதற்குத் தமிழ் நாட்டுக்கு உரிமை உண்டு.

திரு. அ. ப. சண்முகசுந்தரம் : நீராற்றின் அணைக்கட்டு வேலை முடிந்ததற்குப் பிறகு மேலும் எவ்வளவு ஏக்கர் நிலத்திற்கு அதிகப்படியான பாசன வசதி கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரக்குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : இந்த நீராற்றுப் பிரச்னையோடு பரம்பிக்குளம்—ஆளியாறு பிரச்சினை சம்பந்தமாகவும் கேரள அரசோடு இன்னும் பேசவேண்டியிருக்கிறதா? புதிதாக பாண்டியாறு, புன்னம்புழா ஆற்றுத் திட்டத்தை அமுலாக்குவது பற்றிக் கேரள அரசோடு நம் அரசு பேசிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாண்டியாறு—புன்னம்புழா என்பது தனிப்பட்ட பிரச்னை. பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. பாண்டியாறு—புன்னம்புழா பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் அளிக்கிறேன்.

Linking of Ganges with Cauvery

* 32 Q.—THIRU N. K. PALANISAMY :
THIRU S. DURAISAMY : } Will the Hon the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that the State Government has requested the Centre to take a survey for linking the Ganges with the Cauvery; and

(b) if so, the details of the same?

[1971 ஜூன் 23

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : கங்கையைக் காவிரியுடன் இணைப்பது குறித்து ஆய்வு செய்யுமாறு பாசன ஆணைக்குழுவை அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : காவிரியோடு கங்கையை இணைப்பதன் மூலம் நமக்கு மிகுந்த நன்மை கிடைக்கும். ஆகவே, அதை விரைவாக முடிப்பதற்கு அரசாங்கம் மூலம் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் ஏதாவது இருந்தால் அதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காவிரியோடு கங்கையை இணைக்கிற அத்திட்டம் மத்திய அரசு மேற்கொள்ள வேண்டிய திட்டமாகும். இதற்கான ஆய்வுகளை நடத்துவதற்கு இந்த அரசு பாசன ஆணைக் குழு மூலம் மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : காவிரியைக் கங்கையோடு இணைக்க வேண்டுமென்கிற திட்டத்தை முதன்முதலாகத் தமிழக மக்களுக்குச் சொன்னவர் மதிப்பிற்குரிய திரு. எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்கள் ஆவார்கள். பல தடவை மத்திய அரசு இதைப் பற்றிப் பேசினாலும் கூட நம்முடைய மாநில அரசு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இதன் சர்வேயை ஆரம்பிக்கவேண்டும் என்று வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபற்றி நமது அரசாங்கம் ஏற்கனவே வலியுறுத்தியிருக்கிறது. இத்திட்டத்தை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்தினிடம் இருக்கிறது. நீர்ப்பாசன அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் திட்டக் குழுவின் அனுமதி எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கங்கை-காவிரி இணைப்பைப் பற்றி மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடத்தில் கூட பேசிக்கொண்டிருந்தபோது திரு. கே. எல். ராவ் அவர்களிடத்தில் முன்பு பேசிக்கொண்டிருந்த போதும் மாநில அரசு சார்பாக நாம் வலியுறுத்தியிருப்பது கங்கையிலிருந்து காவிரிக்கு இந்த இணைப்புத் திட்டத்தை அமைப்பதற்கு முன்பு அங்கிருந்து நர்மதா போன்ற பல்வேறு நதிகளைக் கடந்து காவிரியோடு இணைக்க வேண்டியிருக்கிறது. நர்மதா, பிறகு கிருஷ்ணை, இந்த நதிகளையெல்லாம் இணைக்க வேண்டியிருக்கிறது. எப்படியும் இத்திட்டத்தை இப்போது ஆரம்பித்தால்கூட முடிவடைவதற்கு ஐம்பது ஆண்டுகளாவது ஆகும் என்று சொல்லப்படுகிறது. ஐம்பது ஆண்டுக் காலம் ஆகுமே என்பதற்காக அத்திட்டத்தை ஆரம்பிக்காமல் இருந்து விட்டால், அது தள்ளிப்போடப்பட்டுக் கொண்டே போய் விடும். அது நம் காலத்திலேயே நிறைவேற வேண்டுமென்று இல்லாமல், நம் காலத்தில் ஆரம்பித்தோம் என்றிருந்தால் பிறகு இந்தியா முழுமைக்கும் பயனுள்ளதாக அது அமையும் என்றளவில் அதுபற்றி மேலும் மேலும் மாநில அரசு சார்பாக நாம் வலியுறுத்தி வருகிறோம். அந்த அடிப்படையில்

1971 ஜூன் 23]

அந்த இணைப்பு எற்படும்போது முதலில் கிருஷ்ணா-காவிரியி லிருந்து இணைப்புகளை ஆரம்பித்துக் கொண்டே போய்க் கடைசி யாக்க கங்கை-நர்மதா போன்ற இணைப்புகளை ஏற்படுத்தி, அனைத்தையும் ஒன்றாகக் கொண்டுவரலாம் என்றதொரு யோசனை யும் மாநில அரசு சார்பாக மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட் டிருக்கிறது. அதையும் ஓரளவிற்கு அவர்கள் ஒப்புக்கொண்டிருக் கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த இரண்டு நதிகளையும் இணைப்பதற்கு மத்திய அரசிலிருந்து நிபுணர் குழு ஏதாவது நியமனம் செய்திருக்கிறார்களா? ஏதாவது ஆய்வு நடத்தியிருக் கிறார்களா ? அப்படி இருந்தால் அதன் விவரத்தைப்பற்றி நம் மாநில அரசுக்கு ஏதாவது நகல் தந்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிப்பட்ட நகல் எதுவும் வரவில்லை. திரு. கே. எல். ராவ் அவர்களைச் சந்தித்து நான் பேசிய நேரத்தில், மைசூர் முதலமைச்சர் அவர்களும் நானும் நம்முடைய அமைச்சர்களும் திரு. ராவ் அவர்களைச் சந்தித்த போது டெல்லியில் சொல்லியிருக்கிறோம். அதற்கான இன்வெஸ்டி கேஷன்ஸ் போன்ற காரியங்களை நடத்துவதற்குக் கூட மாநில அரசுகளின் சார்பில் பங்குத் தொகை தரவேண்டுமென்றால், அதைக் கூட தருவதற்குத் தயாராகயிருக்கிறோம்; ஆகவே, இன்வெஸ்டி கேஷன்ஸ் போன்ற காரியங்களை ஆரம்பியுங்கள் என்று நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

DR. H. V. HANDE: Sir, before we come to the problem of connecting Cauveri with Ganga and getting more water there is a serious possibility of our losing a substantial share of the water that we are already getting from Cauveri. So, will the Hon. Chief Minister or the Minister concerned enlighten this House as to the immediate steps that they are likely to take to see that the water that we are already getting for our irrigation purposes from Cauveri, is not reduced? Since the All-Party meeting, has there been any further progress on the subject?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இன்று காலையில் கூட மத்திய அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் என்னிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு இதுபற்றித் தான் சில கருத்துக்களை அறிவிக்க விரும்புவதாகவும் நான் உடனடியாக டெல்லிக்கு வரமுடியுமா என்றும் கேட்டார்கள். இப்போது சபை நடந்து கொண்டிருக்கிற காரணத்தினால் வர இயலாது, முடியு மானால் தாங்கள் வந்தால் நல்லது என்று அவர்களிடத்தில் சொல்லி யிருக்கிறேன், அவர்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு. ஒருவேளை அங்கும் சபை நடந்து கொண்டிருப்பதால், இது முடியாமல் போகுமானால் ஜூலை முதல் வாரம் வாக்கில் என்னதான் கருத்துக்களைச் சொல்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காக நமது சட்ட அமைச்சர் அவர்களையும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும் டெல்லிக்கு அனுப்புவதாக இருக்கிறேன்.